OPEN ACCESS

Manuscript ID:
TAM-11022026-11415

Volume: 11

Issue: 2

Month: October

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 13.07.2026

Accepted: 25.08.2026

Published: 01.10.2026

Citation:
Senthuran, Nilanthini. "The Sacred Shrine of Kataragama in Colonial Records: A Study Focusing on the Period from 1658 to 1948." *Shanlax International Journal of Tamil Research*, vol. 11, no. 2, 2026, pp. 68–79.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i2.11415

*Corresponding Author:
nilanthinic@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

The Sacred Shrine of Kataragama in Colonial Records: A Study Focusing on the Period from 1658 to 1948

Nilanthini Senthuran
Senior Lecturer, Department of History, Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka
http://orcid.org/0009-0002-7184-1328

Abstract

The sacred shrine of Kataragama, a preeminent multicultural worship center in Sri Lanka, has maintained its political and spiritual prominence since the 3rd century BCE. The colonial European accounts, notably by Robert Knox, depicted Kataragama as a mysterious wilderness, highlighting a unique socio-spiritual defense where the fear of the deity deterred Portuguese and Dutch forces from invading the Kandyan Kingdom from the South. However, during the Dutch and British colonial rule (1658–1948), the shrine's hereditary administrative structure and religious autonomy encountered severe subversions. Employing a historical methodology, this study demonstrates that the colonial state perceived Kataragama not merely as a religious site, but through the dual lenses of a 'political security threat' and a 'public health hazard'. The research intensively analyzes how the British administration, under the pretext of preventing cholera outbreaks that threatened the lucrative plantation economy, enforced the Gazette notification of 1893. This regulation drastically restricted pilgrims to a mere 150, introduced a modern visa like permit system, and weaponized police surveillance, thereby converting the centuries-old traditional Pada Yatra (Foot Pilgrimage) into a heavily militarized state-controlled procession. Consequently, this study exposes how the colonial government violated Clause5 of the Kandyan Convention of 1815 by covertly dismantling the traditional rights of the Kapuralas and the autonomy of the Basnayake Nilame to serve fiscal and imperial interests. Concurrently, it notes that despite these interventions, European chroniclers documented with fascination the shrine's resilient pluralistic identity, which harmoniously accommodated Veddas, Buddhists, Hindus and Sufi Muslims.

Keywords: *Kataragama, Colonial Records, Administrative Structure, Public Health, Gazette Notification, Kandyan Convention.*

References

1. Geiger, W. (Trans.). (1912). The Mahavamsa or The Great Chronicle of Ceylon. Oxford University Press. (Chapter XIX.
2. Wirz, P. (1954). Kataragama: The Holiest Place in Ceylon. Lake House Investments.
3. Knox, R. (1681). An Historical Relation of the Island Ceylon in the East-Indies. Richard Chiswell.
4. Leonard Wollf. (1963). Diaries in Ceylon (1908-1911). The Hogarth Press
5. Leonard Wollff (1961).Growing: An Autobiography of the Years 1904 to 1911, New York, Harcourt, Brace & World.
6. D'Oyly John. (1929). A Sketch of the Constitution of the Kandyan Kingdom. Colombo. Government Printer.
7. The Hindu Organ - Vol. XLVII No. 11, May 20, 1935.

காலனித்துவ காலக் குறிப்புக்களில் கதிர்காமகத் திருத்தலம்: 1658 தொடக்கம் 1948 வரையான காலப்பகுதியை மையப்படுத்திய ஆய்வு

நிலாந்தினி செந்தூரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை
கலைகலாசாரபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் பன்முகப் பண்பாட்டுடன் கூடிய வழிபாட்டு மையமான கதிர்காமக் கந்தன் திருத்தலம், கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் அரசியல் மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கி வருகின்றது. காலனித்துவகால ஐரோப்பிய ஆவணங்கள், குறிப்பாக ரோபேர்ட் நொக்சின் குறிப்புகள், கதிர்காமத்தை காட்டுப் பகுதி எனச் சித்தரித்ததோடு, அத்தெய்வத்தின் மீதான பயம் காரணமாக ஐரோப்பியப் படைகளால் கண்டி இராச்சியத்தை ஊடுருவ முடியாமல் போன அரசியல்-ஆன்மீகப் பாதுகாப்புப் பின்னணியையும் பதிவு செய்துள்ளது. 1658 முதல் 1948 வரையான ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இத்திருத்தலத்தின் பாரம்பரிய நிருவாக முறைமையும் மதச் சுதந்திரமும் பெரும் சவால்களை எதிர்கொண்டன. வரலாற்று அணுகுமுறையிலான இவ்ஆய்வு, காலனித்துவ அரசு கதிர்காமத்தை வெறும் ஆன்மீகத் தலமாகப் பார்க்காமல், “அரசியல் பாதுகாப்பு அச்சுறுத்தல்” மற்றும் “பொது சுகாதாரப் பேரிடர் மையம்” என்ற இரு கோணங்களிலேயே கையாண்டது என்பதை வெளிப்படுத்துகிறது. 1815கண்டி ஒப்பந்தத்தின் 5ஆம் பிரிவின்படி சுதேச மதங்களைப் பாது காப்பதாக அளித்த வாக்குறுதியை மீறி, காலனித்துவ அரசு தனது சுயநலப் பொருளாதார மற்றும் அரசியல் தேவைகளுக்காகக் கப்புராளர்களின் பாரம்பரிய உரிமைகளிலும் பஸ்நாயக்க நிலமேயின் சுயாட்சியிலும் தலையிட்டதை ஆவணச் சான்றுகளுடன் இவ்ஆய்வு தொகுத்துரைக்கிறது. அதேவேளை, இப்பகுதியின் பன்முகப் பண்பாட்டுத் (வேடர்கள், பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள்) தனித்துவத்தை ஐரோப்பியர்கள் வியப்புடன் ஆவணப்படுத்தியுள்ளதையும் இவ்ஆய்வு சுட்டிக்காட்டுகிறது.

திறவுச் சொற்கள்: *கதிர்காமம், காலனித்துவக் குறிப்புகள், நிருவாகக் கட்டமைப்பு, பொது சுகாதாரம், கண்டி ஒப்பந்தம்.*

அறிமுகம்

ஈழத்துத் திருத்தலங்களில் வரலாற்று ரீதியாகவும் ஆன்மீகரீதியாகவும் மிகத் தொன்மையான, பன்முகப் பண்பாட்டு மையமாக விளங்குவது கதிர்காமக் கந்தனின் திருத்தலமாகும். மகாவசம் இலக்கியத்தின்படி, கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் மன்னனின் ஆட்சிக்காலத்தில், அநுராதபுரத்தில் ஸ்ரீ மகா போதி நடப்பட்ட வரலாற்று நிகழ்வில் கதிர்காமத்தைச் சேர்ந்த “சத்திரியர்கள்” கலந்துகொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (Geiger, 1912: 53–55). இதன் மூலம், துட்டகைமுனு மன்னனின் காலத்திற்கு முன்னரேயே இப்பகுதி ஒரு முக்கிய அரசியல் மற்றும் வழிபாட்டு மையமாக விளங்கியுள்ளமை தெளிவாகின்றது. அடர்ந்த காட்டுப் பகுதியில், மாணிக்க கங்கையின் கரையில் அமைந்துள்ள இத்திருத்தலம், ஆரம்பத்தில் இப்பகுதியின் பூர்வ குடிகளான வேடர்களின் வழிபாட்டுத் தலமாகவும், பின்னர் இந்து மற்றும் பௌத்த மதங்களின் வழிபாட்டு மரபுகள் ஒன்றிணைந்த ஒரு தனித்துவமான ஆன்மீக மையமாகவும் பரிணமித்தது. கி.மு. 2ஆம்

நூற்றாண்டில் துட்டகைமுனு மன்னன் எல்லாளனை வீழ்த்திய பின்னர், கதிர்காமக் கந்தனுக்குப் பெரியதொரு கோயிலைக் கட்டி, அதன் தினசரி வழிபாடுகளுக்காகவும், நிருவாகத்திற்காகவும் பெருமளவிலான நிலங்களையும்,"கப்புராளர்கள்" எனப்படும் பாரம்பரிய பூசாரிகளுக்கான கடமைகளையும் முறைப்படுத்தினான் என்பது வரலாற்று மரபாகும் (Wirz,1954:7-9) இத்தகைய தொன்மை வாய்ந்த பாரம்பரிய அமைப்பே, பிற்காலத்தில் ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கத்தின் போது பெரும் சவால்களுக்கும் மாற்றங்களுக்கும் உள்ளானது.

ஆய்வின் நோக்கம்

ஆய்வின் பிரதான நோக்கங்களாக ஐரோப்பியக் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் கதிர்காமக் கோயிலின் பாரம்பரிய நிருவாகக் கட்டமைப்பு காலனித்துவ அதிகாரத்து வத்தால் கையாளப்பட்ட விதத்தினை ஆராய்தல் மற்றும் காலனித்துவகால அறிக்கைகளின் மூலம் கதிர்காம ஆலயத்தின் வருமானம், நிலமானிய முறைமை, திருவிழாக்கள் மீது காலனித்துவ அரசு செலுத்திய கட்டுப்பாடு களை வெளிக்கொணர்தல் என்பனவாகும்.

ஆய்வின் கருதுகோள்

காலனித்துவ அரசுகள் கதிர்காமக் கோயிலின் மதச் சுதந்திரத்தை நேரடியாக ஒடுக்காது அதன் பரந்த நில வளங்களையும், பஸ்நாயக்க நிலமே போன்ற பாரம்பரிய அதிகாரத்துவ அமைப்புகளையும் தங்களது வருவாய் மற்றும் அரசியல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம், பாரம்பரிய வழிபாடு, நிருவாக உரிமைகளில் மறைமுகமான மாற்றங்களை ஏற்படுத்தின.

ஆய்வு வினா

ஆரம்பகால ஐரோப்பிய ஆவணங்கள் கதிர்காமத்தை ஒரு 'மர்மமான அல்லது காட்டுப் பகுதி' என்று சித்திரித்தாலும், பிற்கால பிரித்தானிய ஆவணங்கள் அதன் நிலங்களையும் நிருவாகத்தையும் முழுமையாகக் கண்காணிக்க முயன்றன. காலனித்துவ அரசின் வரிக் கொள்கைகள், 1815 கண்டி ஒப்பந்தத்திற்குப் பிந்தைய நிருவாக மாற்றங்கள் மற்றும் 1818, 1848 கிளர்ச்சிகளுக்குப் பின் ஊவா மாகாணத்தில் ஏற்பட்ட அரசியல் பதற்றங்கள், கதிர்காமக் கோயிலின் பூசாரிகளான கப்புராளர்களின் பாரம்பரிய உரிமைகளையும், பஸ்நாயக்க நிலமேயின் சுயாட்சியையும் எவ்வாறு பாதித்தன? இந்த அதிகார மாற்றத்தைக் காலனித்துவப் பதிவுகள் எவ்வாறு ஆவணப்படுத்தியுள்ளன? போன்றவற்றை ஆய்வு வினாக்களாகக் கொண்டு இவ்ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

ஆய்வு முறைமையியல்

இவ்ஆய்வானது வரலாற்று அணுகு முறையில் பண்புசார் விபரண ஆய்வாக அமைகின்றது. இலங்கையில் காலனித்துவ வாதிகளான ஒல்லாந்தர் (1658-1796), பிரித்தானியர் (1796-1948) ஆட்சிக்காலம் வரையான காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமைகின்றது. அத்தோடு முதன்மைத் தரவுகளான காலனித்துவகால அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும் கதிர்காமத் தெய்வத்தின் சக்தியும் உப்புப் பாதையும்

ரோபேர்ட் நொக்ஸ் எழுதிய 'An Historical Relation of the Island Ceylon' (1681) என்ற நூலில் கதிர்காமத்தை கொட்டரகன் என்றும், கதிர்காமக் கடவுளை 'Cotteragom Deyyo' (கதிர்காமத் தெய்வம்) என்றும் பழைய ஆங்கில உச்சரிப்பில் குறிப்பிட்டுள்ளார். அதில் இலங்கையின் மேற்குப் பகுதியிலுள்ள கற்பிட்டி துறைமுகம் மற்றும் கிழக்குப் பகுதியிலுள்ள லேவாவா (அம்பாந்தோட்டை உப்பளம்) மற்றும் கதிர்காமம் (Cotteragom) ஆகிய இடங்களைப் பற்றிக் குறிப்பிடப்

பட்டுள்ளது. இத்தீவின் மேற்குப் பகுதியில் போர்டலூன் (Portaloon – கற்பிட்டி) பகுதியில் ஒரு துறை முகம் அமைந்துள்ளது. அங்கிருந்துதான் நாட்டின் ஒரு பகுதிக்கு உப்பும் கருவாடும் விநியோகிக்கப் படுகின்றன. அங்கே அவர்கள் டச்சுக்காரர்களுடன் (ஒல்லாந்தர்) சிறிய அளவில் வர்த்தகம் செய்கிறார்கள். படகுகள் உள்ளே வராமல் தடுப்பதற்காக டச்சுக்காரர்கள் அந்த முனையில் ஒரு கோட்டையைக் கட்டியுள்ளனர். ஆனால், கிழக்குப் பகுதிகள் மிகவும் தொலைவிலும், மலைப்பாங்காகவும் இருப்பதால், உப்பிற்காக அங்கிருந்து கால்நடைகளை ஓட்டிக்கொண்டு இவ்வளவு தூரம் வருவது கடினமாக இருந்தது.

எனவே, இறைவனின் அருளால் அவர்களுக்கு மிக அருகிலேயே, கிழக்குப் பக்கத்தில் இடம் அமைந்துள்ளது. அதை அவர்கள் தங்கள் மொழியில் "லேவாவா" (Leawava – உப்பளம்) என்று அழைக்கிறார்கள். அங்கே ஏராளமாகக் கிடைக்கும் அளவுக்கு உப்பு விளைகிறது. கிழக்குக் காற்று வீசும்போது அங்கே கடல் நீர் உள்ளே பாய்கிறது. மேற்குக் காற்று வீசும்போது (அங்கே நல்ல வானிலை நிலவும்போது) அது உப்பாக மாறுகிறது. அவர்கள் தங்களுக்குத் தேவையான அளவு எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும் அளவுக்கு அங்கே உப்பு மிகுதியாகக் கிடைக்கிறது.

"லேவாவா" பற்றிய விவரிப்பு: இந்த லேவாவா என்ற இடம் சர்வவல்லமையுள்ள இறைவனின் அருளால் எவ்வளவு அற்புதமாக அமைந்துள்ளது என்றால், போர்க்காலங்களில்கூட போர்த்து கீசியர்களாலோ அல்லது டச்சுக்காரர்களாலோ இந்த மக்கள் இந்த உப்பின் பயனைப் பெறுவதைத் தடுக்கவே முடியாமல் போனது. மக்கள் தங்களுக்குத் துன்பமோ அல்லது போரோ வரும் காலங்களில் மிகவும் மதிப்பிற்குரிய ஒன்றாக இந்த உப்பைக் கருதுகிறார்கள். இதனால் பெரும்பாலான மக்கள் அத்தகைய நெருக்கடி காலங்களை எதிர் கொள்வதற்காகத் தங்களுக்குள் உப்பைச் சேமித்து வைத்திருக்கிறார்கள்.

நான் கேள்விப்பட்டவரை, இந்த இடம் நிலப்பகுதியில் மலைகளால் சூழப்பட்டுள்ளது கடல் வழியாகக் கப்பல்கள் வந்து தங்குவதற்கும் இது வசதியான இடமல்ல. மேலும், இது மிகவும் நோய் பரவக்கூடிய பகுதியாகும். இதற்கு அருகிலுள்ள "கொட்டரகம்" (கதிர்காமம்) என்ற ஊரில் வாழும் ஒரு பெரிய தெய்வத்தின் சக்திதான் காரணம் என்று மக்கள் நம்புகிறார்கள். உப்பு எடுக்கச் செல்லும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் இந்த வழித்தடத்தில் உள்ள அந்தத் தெய்வத்திற்குக் காணிக்கை செலுத்த வேண்டும்.

இந்தத் தெய்வத்தின் பெயரும் சக்தியும் சிங்களவர்களிடையே எவ்வளவு பெரிய அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது என்றால், இந்த அரசனுக்கு எதிரியாக இருந்து, அவனுக்கு எதிராகப் போர்த்துகீசியர்களுக்கும் டச்சுக் காரர்களுக்கும் சேவை செய்தவர்கள்கூட, இந்த வழியாக வந்து நாட்டின் மீது படையெடுப்பதற்கு இரு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒருபோதும் உதவ முன்வரவில்லை.

நாட்டின் முதன்மைத் தெய்வங்களில் ஒன்றாக கதிர்காமத் தெய்வம் வழிபடப்படுதல்

நூலின் மூன்றாம் அத்தியாயத்தில் இலங்கையின் மத நம்பிக்கைகள் மற்றும் திருவிழாக்கள் பற்றி நொக்ஸ் விவரிக்கிறார். கண்டியில் நடைபெறும் பிரம்மாண்டமான வருடாந்த பெரஹரா (ஊர்வலம்) திருவிழாவில், மூன்று முக்கிய தெய்வங்கள் மற்ற எல்லாவற்றையும் விட மிக உயர்ந்ததாக மதிக்கப்பட்டதாகக் கூறுகிறார்.

"விண்ணையும் மண்ணையும் படைத்த தெய்வமான Allout neur dio (அளுத்நுவர தெய்வம் - விஷ்ணு), Cotteragom Deyyo

(கதிர்காமத் தெய்வம் - முருகன்) மற்றும் Pottingt dio (பத்தினித் தெய்வம்) ஆகிய மூன்று தெய்வங்களும் இந்த ஊர்வலத்தில் ஒன்றாக உலா வருகின்றன. மற்ற எல்லா தெய்வங்களையும் விட இவர்களே மிகச் சிறந்தவர்களாகவும் முதன்மையானவர்களாகவும் கருதப்படுகிறார்கள்.”

கண்டி பெரஹரா ஊர்வலம் பற்றிய விவரிப்பில், “..இவர்களுக்குப் பின்னால், தனது முதுகில் இரண்டு பூசாரிகளைச் (Priests) சுமந்துகொண்டு ஒரு யானை வருகிறது. அந்தப் பூசாரிகளில் ஒருவர், முன்பு குறிப்பிடப்பட்ட, தோளில் வர்ணம் பூசப்பட்ட தடியைச் சுமந்து வரும் பூசாரி ஆவார். இவர் வானத்தையும் பூமியையும் படைத்த கடவுளான “அளுத் நுவர தெய்யோ” (Allout neur Dio - Alutnuwara Deiyo) என்பவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவருக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் மற்றொரு பூசாரி, வெயில் அல்லது மழையிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்காக அவரது தலைக்கு மேல் குடை போன்ற ஒரு வட்டமான பொருளைப் (முத்துப்பரவட்டக் குடை) பிடித்துக் கொண்டிருக்கிறார்.

அதற்கடுத்து, அவருக்குப் பின்னால் சில அடி தூரத்திற்குள், அவரது இருபுறமும் இரண்டு யானைகள் வருகின்றன. அவற்றின் மீதும் தலா இரண்டு பூசாரிகள் அமர்ந்துள்ளனர். முன்னரே குறிப்பிட்டது போல, அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருக்கும் பூசாரிகள் குடைகளைப் பிடித்துள்ளனர். இந்த இரண்டு யானைகளில் ஒன்று “கதிர்காமத் தெய்யோ” (Cotteragom Dio-கதிர்காமக் கடவுள்) என்ற தெய்வத்தையும், மற்றொன்று “பத்தினி தெய்யோ” (Potting Dio-பத்தினி தெய்வம்) என்ற தெய்வத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

இங்கு ஒன்றாக ஊர்வலமாகச் செல்லும் இந்த மூன்று தெய்வங்களும் மற்ற அனைத்து தெய்வங்களைவிடவும் மிக உயர்ந்தவர்களாகவும் முதன்மையானவர்களாகவும் மக்களால் கருதப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரு கோவிலும் (Pagoda/Devalaya) உள்ளது.

கண்டி இராச்சியத்தின் நிருவாகக் கட்டமைப்பில் கதிர்காமத் தெய்வம்: டொய்லியின் ஆவணப் பதிவுகள்

சேர் ஜோன் டொய்லி (Sir John D’Oyly) என்பவர் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டி இராச்சியத்தை ஆங்கிலேயர்கள் கைப்பற்றுவதற்கு முக்கிய ஒற்றராகவும், பின்னர் கண்டியின் பிரித்தானிய அதிகாரியாகவும் இருந்தவர். அவர் எழுதிய ‘A Sketch of the Constitution of the Kandyan Kingdom’ (1835) என்ற அரசாங்க அறிக்கையிலும், கண்டியின் நிருவாக ஆவணங்களிலும் கதிர்காமத் தெய்வம் மற்றும் கதிர்காமக் கோவில் பற்றிப் பதிவிடப்பட்டுள்ளது.

குறிப்புக்களின்படி ரோபேர்ட் நொக்ஸ் ஒரு கைதியாக இருந்து பார்த்ததை எழுதினார். ஆனால் ஜோன் டொய்லி கண்டி இராச்சியத்தின் அரசநிருவாகம், சட்டங்கள், திருவிழாக்கள் எந்த அளவிற்கு கதிர்காமத் தெய்வத்தோடு பிணைக்கப்பட்டிருந்தன என்பதை ஓர் அதிகாரியாகப் பதிவு செய்துள்ளார்.

அவரது அறிக்கையின் முக்கிய விபரங்கள்

1. அரசு அங்கீகாரம் மற்றும் பெரஹரா ஊர்வல ஒழுங்கு (The Order of Perahara) கண்டியில் நடக்கும் புகழ்பெற்ற “செங்கடகல பெரஹரா” (Kandy Perahera) திருவிழாவில், நாற்புறமும் உள்ள நான்கு முக்கிய தேவாலயங்களின் (Devalayas) வரிசை மற்றும் நிருவாகத்தை டொய்லி விவரிக்கிறார். அரசனுக்கும் பௌத்த மதத்திற்கும் இணையாக இந்தத் தேவாலயங்கள் மதிக்கப்பட்டன. டொய்லியின் அறிக்கையின்படி, ஊர்வலம் செல்லும் ஒழுங்குமுறை வரிசையானது நாத தேவாலயம் (Natha Devalaya) மகா விஷ்ணு தேவாலயம் (Maha Vishnu

Devalaya) கதிர்காம தேவாலயம் (Kataragama Devalaya), பத்தினி தேவாலயம் (Pattini Devalaya) என்பனவாகும். கதிர்காமத் தெய்வத்தின் ஊர்வலத்தை முன்னின்று நடத்தும் முதன்மை அதிகாரி "கதிர்காம தேவாலே பஸ்நாயக்க நிலமே" (Basnayaka Nilame of Kataragama Devalaya) என்று டொய்லி குறிப்பிடுகிறார். இந்த அதிகாரிக்குக் கண்டி இராச்சியத்தில் உயர் அந்தஸ்தும், அரச மரியாதையும் வழங்கப்பட்டதாக டொய்லி விவரித்துள்ளார்.

கதிர்காமத்தின் கீழ் இருந்த நிந்தகம்கள்

கண்டி மன்னர்கள் கதிர்காம முருகனுக்கு வழங்கிய மானியங்கள் பற்றி டொய்லி குறிப்பிட்டுள்ளார். கதிர்காமத் தெய்வத்தின் வழிபாட்டிற்காகவும், திருவிழாச் செலவுகளுக்காகவும் கண்டி இராச்சியத்தின் பல பகுதிகளில் "நிந்தகம்கள்" ஒதுக்கப் பட்டிருந்தன. அந்த நிலங்களில் வாழும் மக்கள் கதிர்காமத் தெய்வத்திற்குரிய கடமைகளைச் (Rajakariya) செய்ய வேண்டும் அல்லது கோவிலுக்கு நெல், எண்ணெய் போன்றவற்றை வரியாகச் செலுத்த வேண்டும் என்ற சட்ட நடைமுறையை டொய்லி விளக்கியுள்ளார்.

பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிரான புரட்சியில் கதிர்காமத்தின் பங்கு (1817 - 1818 உவா புரட்சி): ஜோன் டொய்லியின் அதிகாரப்பூர்வ ஆவணங்களில், 1817ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக வெடித்த "உவா-வெல்லஸ்ஸ மகா கலகம்" (Uva Rebellion) பற்றிய குறிப்புகள் மிக முக்கியமானவை. ஆங்கிலேய ஆட்சியை ஒழிப்பதற்காக, கலகக்காரர்களின் தலைவர்களில் ஒருவரான மதுகல்லே உத கபட நிலமே (Madugalle) என்பவர், 1816 புரட்டாதி மாதத்தில் கதிர்காமத் தெய்வத்திற்குப் பகிரங்கமாகக் காணிக்கைகளைச் செலுத்தி, பிரித்தானியரை நாட்டிலிருந்து விரட்டவும், ஒரு சுதேச அரசனை மீண்டும் அரியணையில் அமர்த்தவும் வேண்டிப் பிரார்த்தனை செய்தார் என்று டொய்லியின் உளவுத்துறை அறிக்கைகள் பதிவு செய்துள்ளன.

எனவே ரோபேர்ட் நொக்ஸின் கூற்றைப் போலவே, அதற்கு 150 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்ட ஜோன் டொய்லியின் அறிக்கையும், கதிர்காம முருகன் கண்டி இராச்சியத்தின் பௌத்த அரசமைப்போடும், மக்களின் அரசியல்-மத வாழ்வோடும் பிரிக்க முடியாத ஒரு முதன்மைத் தெய்வமாக விளங்கியதைச் சட்டபூர்வமாக உறுதிப்படுத்துகிறது.

பிரித்தானிய அதிகாரி லியோனார்ட் வுல்பின் குறிப்புக்களில் கதிர்காமம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில், இலங்கையின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய லியோனார்ட் வுல்பின் (Leonard Woolf) அறிக்கையிலிருந்து (1908-1911) மேல்வரும் தகவல்களை அறியமுடிகின்றது.

"........சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பும், அதற்குப் பிறகும், திருவிழா நடைபெறும் பதினைந்து நாட்களின்போது, மலேரியா பரவக்கூடிய, அச்சமூட்டும் மற்றும் பாழடைந்த தோற்றமுடைய இந்த இடத்திற்குச் செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நாகரிக உலகத்தின் பரபரப்புகளிலிருந்து வெகுதொலைவில், வெப்பமண்டலக் காடுகளின் வறண்ட மையப்பகுதியில் இந்த பாழடைந்த, வறண்ட நிலம் அமைந்துள்ளது. களைப்படைந்த யாத்திரிகர்கள் இந்த புனித பூமியை நோக்கி நடந்து வரும்போது, அவர்களின் மனதை அமைதிப்படுத்திய மாபெரும் மரங்கள் அங்கு இருந்தன. உண்மையில், நானும் மாயாஜாலபூமியிலும், விரக்தியின் சதுப்பு நிலங்களிலும் நடந்து செல்லும் யாத்திரிகர்களில் ஒருவனாகவே என்னை உணர்ந்தேன்.

இந்தத் திருவிழா ஆண்டின் வெப்பமான மாதமான ஆடி மாதத்தில் நடைபெறுகிறது.

இக்காலத்தில் இந்த வனாந்தரத்தின் மீது கடுமையான தென்மேற்கு பருவக்காற்று வீசுவதால், யாத்திரிகர்களுக்கு மலேரியா மற்றும் வயிற்றுப்போக்கு நோய்கள் ஏற்படுகின்றன. சுட்டெரிக்கும் நண்பகல் வெயிலில், சுமார் ஐந்து கெஜம் அகலமுள்ள இந்தப் பாதை, வறண்ட கானல் காற்றுடன் ஒரு பகுதி பாலைவனம் போலக் காட்சியளிக்கிறது. மான் போன்ற விலங்குகள் இங்கு வாழ்கின்றன.

யாத்திரிகர்கள் சுமார் பத்து மைல் நீளமுள்ள இந்த பாலைவனம் போன்ற தூரத்தை நடந்தே கடப்பது புண்ணியம் என்று கருதுகிறார்கள். அவர்கள் தங்களது சாமான்களை ஏற்றிச் செல்வதற்குக் கூட வண்டிகளைப் பயன்படுத்துவதில்லை. திஸ்ஸமஹாராமவிற்கும் கதிர்காமத்திற்கும் இடைப்பட்ட இந்த கடினமான பாதையின் இருபுறமும், யாத்திரிகர்கள் தங்குவதற்கும், அவர்களுக்கு உணவும் தண்ணீரும் வழங்குவதற்கும் மூன்று அல்லது நான்கு தங்குமிடங்கள் (சத்திரங்கள்) உள்ளன.

நீண்ட காலமாக இடிபாடுகளுடன் காணப்படும் இந்த புனித தலம், சில ஏக்கர் பரப்பளவில் காடுகள் அழிக்கப்பட்ட ஒரு பகுதியில் அமைந்துள்ளது. திருவிழா நடைபெறும் அந்த இரண்டு வாரங்களைத் தவிர, மற்ற நேரங்களில் இது ஒரு வெறிச்சோடிய தோற்றத்தைக் கொண்டிருக்கும். இக்கோயிலின் ஊழியர்கள் (குத்தகைதாரர்கள்) வாழும் சில வீடுகள் மட்டுமே அங்கு உள்ளன. திருவிழா வாரங்களின்போது, தேயிலைத் தோட்டங்களிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் வரும் ஆரோக்கியமற்ற மற்றும் சுகாதாரமற்ற யாத்திரிகர்களின் பெருக்கத்தால், இவ்விடம் நோய்த்தொற்று பரவும் இடமாக மாறுகிறது. எனவே, திருவிழா காலங்களில் இந்த இடம் ஒரு மாஜிஸ்திரேட்டின் (நீதிபதி) மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டு, மருத்துவ உதவிகள் மற்றும் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. (Leonard Woolf , 1961)

லியோனார்ட் வுல்பின் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளின்படி (1910, ஆடி 7 முதல் 11 வரை) ஆடி 9, 10, 11 ஆகிய தேதிகளிலும் வுல்வ் கதிர் காமத்திலேயே தங்கியிருந்து களப் பணிகளை ஆய்வு செய்தார்.

ஆடி 7, காலை 8 மணிக்கு மேல் மாகம்பத்து காட்டுப் பகுதியில் பயணம் செய்வது மிகவும் கடினமாகவும், சலிப்பை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. அப்பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மழையே பெய்யவில்லை. புற்கள் கருகி கறுப்பாகியிருந்தன. செடிகள் மற்றும் சிறிய புதர்கள் காய்ந்து பழுப்பு நிறமாக மாறின. பெரிய மரங்கள் இலைகளை இழந்து மொட்டையாகக் காட்சியளித்தன. ஆங்காங்கே காடுகளில் ஏற்பட்ட தீயினால் நிலம் கருகிப் போயிருந்தது. இந்த வரலாறு காணாத வறட்சியால், உப்பளங்களில் ஏற்கனவே 1,30,000 cwts (ஹண்டர்ட்வெயிட் - ஒரு வகையான எடைக் குறியீடு) உப்பு சேகரிக்கப் பட்டிருந்தது. இது ஒரு சாதனை அளவு என்றாலும், பூந்தல (Bundala) பகுதியில் குடிநீர் தீர்ந்து போனதாலும், லேவாவாக்களில் (உப்பளம்) சேகரிக்கப்பட்ட உப்பு காற்றில் பறந்து வந்த மணலால் மூடப்பட்டதாலும், தொழிலாளர்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

அனுமதிச் சீட்டுப் போட்டி: திஸ்ஸமஹாராமவில் இருந்து கதிர்காமம் செல்வதற்கான வெறும் 75 அனுமதிச் சீட்டுகளுக்காக (Tickets) சுமார் 300 பேர் விண்ணப்பித்துக் காத்திருந்தனர். கதிர் காமத்தில் பகல் நேர வெப்பம் சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தது. காலை 10 மணிக்கு மேல் தங்குமிடத்திற்குள் (Bungalow) கூட தொப்பி அணியாமல் இருக்க முடியாது. கண் ஈக்களும், மணல் புயலும், இரவில் வரும் கொசுக்களும் அதிகாரிகளையும் பக்தர்களையும் வதைத்தன.

ஆடி 8 அன்று காலை வுல்வ் கதிர்காமம் சென்றடைந்தார். அங்கிருந்த ஆர்.எம்

(சு.ஆ - ரட்டேமஹத்மயா /பிராந்திய அதிகாரி), டி.எம்.ஓ (D.M.O - மாவட்ட மருத்துவ அதிகாரி) மற்றும் ஆலயப் பூசாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

சாலை வரி: ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் முந்தைய ஆண்டு சாலை வரி செலுத்தாத காரணத்திற்காக அதிகளவிலான மக்கள் சிறையில் அடைக்கப்பட்டதற்கு பிரித்தானிய அரசாங்கம் விளக்கம் கேட்டிருந்தது. இந்த மாவட்டத்தில் மக்கள் வரி செலுத்துவதைத் தவிர்ப்பது வழக்கமாக இருந்தது. வரியைக் கடுமையாக வசூலித்தால் சிறைவாசமும், தளர்த்தினால் வரியின்மையும் தான் மிஞ்சும் என வுல்வ் குறிப்பிடுகிறார். இந்தச் சாலை வரியை ஒரு மோசமான வரி என்று வுல்வ் விமர்சிக்கிறார். சாலைகளை அதிகமாகப் பயன்படுத்தி, ஓய்வு விடுதிகளில் தங்கும் வசதி படைத்தவர்களுக்கு இந்த வரி ஒரு பொருட்டே அல்ல. ஆனால், சாலைகளைப் பயன்படுத்தாத, மாதத்திற்கு வெறும் 10 ரூபாய் மட்டுமே வருமானம் ஈட்டும் ஏழை கிராம மக்களுக்கு இந்த வரி (ரூ.1.50) பெரும் சுமையாகும். (தன்னுடைய வருமானத்தோடு ஒப்பிடும் போது, சாதாரண மனிதன் செலுத்தும் விகிதத்தில் தான் வரி செலுத்தினால் அது வருடத்திற்கு 1.50 ரூபாய்க்குப் பதிலாக 150 ரூபாயாக இருக்க வேண்டும் என்கிறார் வுல்வ்).

ஆடி 11, காணாமல் போன வனக்காவலர் கதிர்காமத்தில் வுல்வைச் சந்தித்த வனக் காவலர் ஒருவர், "புஞ்சிராலா" (Punchirala) என்ற மற்றொரு வனக்காவலர் ஆனி 27 முதல் காணாமல் போயுள்ளார் என்ற விபரத்தைத் தெரிவித்தார். அவர் கட்டகமுவ (Katagomuwa) பகுதியிலிருந்து தனது வழக்கமான ரோந்துப் பணிக்காகச் சென்றபோது காணாமல் போயுள்ளார். (Leonard Woolf, 1963:166, 167).

மேலும் இந்து சாதனப் பத்திரிகையில், "கஜாரகாமா" அல்லது "கசரகாம" (Kacaraggama/ Kajara-gama) என்ற பழங்காலப் பெயரே மருவி "கதிர்காமம்" என்றானது. மஹாவம்சம் நூலின்படி, தேவநாம்பிய திஸ்ஸ மன்னனின் ஆட்சிக்காலத்தில், அனுராதபுரத்தின் புனித போதி மரத்தின் கிளை ஒன்று இங்கு கொண்டு வரப்பட்டு, கதிர்காம இளவரசர்களின் முன்னிலையில் நடப்பட்டது. அதன் பிறகு இங்கு விவசாயம் செழித்து, துறவிகளுக்கான விகாரைகளும் வீடுகளும் உருவாகி கிராமம் செழித்தது. பின்னர் லோகா என்ற மாவீரனின் ஆட்சியிலும் இருந்தது. இக்கோவில் மாணிக்க கங்கையின் இடது கரையில் அமைந்துள்ளது. இந்த நதி ஊவா மலையின் மவுஸ்ஸாகலை (Maussagala) தோட்டத்தில் உற்பத்தியாகி, பத்தல மற்றும் தெய்யன்னகம்பா வயல்களைச் செழிப்பாக்கி, கதிர்காமத்தை அடைந்து, இறுதியாக 16 மைல் தொலைவில் உள்ள பல்லணங்கல கடல் பகுதியில் கலக்கிறது" எனக்கூறப்பட்டுள்ளது. (The Hindu Organ 20. 05. 1935)

காலனித்துவச் செயலாளரின் வர்த்தமானி அறிவித்தல் இல. 5,226 (22.06.1893)

"கதிர்காமத்திற்கான வருடாந்த புனித யாத்திரை பற்றிய அவசரச் சட்டம்" என தலைப்பிடப்பட்ட 1873ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சட்டத்தின்படி, ஆளுநரானவர் தனது நிறைவேற்றுச் சபையின் ஆலோசனையுடன், அரசாங்க வர்த்தமானி மூலம் அவ்வப்போது பின்வரும் நோக்கங்களுக்காக கட்டளைகளைப் பிறப்பிக்கவும், அவற்றை நடைமுறைப் படுத்த அதிகாரிகளை நியமிக்கவும் சட்டம் அனுமதிக்கிறது:

1. தீவின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இந்த யாத்திரைக்குச் செல்ல அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையையும், அவர்கள் கதிர்காமத்தில் தங்கியிருக்கும் காலத்தையும் கட்டுப்படுத்துதல்.
2. வெவ்வேறு தொடக்க மற்றும் தங்குமிடங்களில் மக்கள் கூடுவதையும், கதிர்காமத்திற்கான அவர்களின் பயணத்தை ஒழுங்குபடுத்துதல்.

3. தூய்மையைப் பேணவும், தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கவும் தேவையான நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்தல்.

இதற்கமைய, கௌரவ தற்காலிக ஆளுநரால் நிறைவேற்றுச் சபையின் ஆலோசனையுடன் உருவாக்கப்பட்ட பின்வரும் உத்தரவுகள் பொதுத்தகவலுக்காக வெளியிடப் படுகின்றன:

யாத்திரிகர் எண்ணிக்கை மற்றும் அனுமதிச் சீட்டுக் கட்டுப்பாடுகள் (1893)

விதி 1: 1893ஆம் ஆண்டுக்கான யாத் திரிகர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 150ஆகக் கட்டுப் படுத்தப்படுகிறது. அதாவது கொழும்பு குழுவிற்கு 25 பேர், கண்டி குழுவிற்கு 25 பேர், காலி குழுவிற்கு 25 பேர், குருநாகல் குழுவிற்கு 25 பேர், மட்டக்களப்பு குழுவிற்கு 25 பேர் மற்றும் பதுளை குழுவிற்கு 25 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

விதி 2: அந்தந்த மாகாணங்களின் அரசாங்க அதிபர்களிடமிருந்து முன்கூட்டியே அனுமதிச் சீட்டு பெறாமல் யாரும் 1893 யாத்திரையில் பங்கேற்கக் கூடாது.

விதி 3: ஒவ்வொரு யாத்திரிகரும் பொலிஸ் அதிகாரிகளோ அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகளோ கேட்கும் போது தனது அனுமதிச் சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

யாத்திரை மற்றும் தங்குமிட ஒழுங்கு முறைகள் (1874.06, 5 இன் விதிகள்)

விதி 1 (கால எல்லை): சுகாதாரக் காரணங்களுக்காக, கதிர்காமத் திருவிழாவின் காலமும் யாத்திரிகர்கள் அங்கு தங்கும் காலமும் இனிமேல் நான்கு நாட்களாகக் குறைக்கப்படுகிறது.(பௌர்ணமிக்கு மூன்று நாட்களுக்கு முன் வருகைக்காக ஒரு நாள், பௌர்ணமி தினமும் அதற்கு முந்தைய தினமும் வழிபாட்டிற்காக இரண்டு நாட்கள், பௌர்ணமிக்கு அடுத்த நாள் கதிர்காமத்தை விட்டு வெளியேறுவதற்காக நான்காவது நாள்). இதற்கு முன்னரோ அல்லது பின்னரோ தங்குபவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவர்.

விதி 2 (தகுதிப் பரிசோதனை): நோய், பலவீனம், முதிர்ந்த வயது, சிறுவயது, உணவுப் பற்றாக்குறை அல்லது இதர காரணங்களால் பயணத்தைத் தொடர தகுதியற்றவர்கள் என கருதப்படுபவர்களையோ, அல்லது நோயுற்று மற்றவர்களின் சுகாதாரத்திற்கு அச்சுறுத்தலாக மாறுவார்கள் என பொலிஸார் நினைப்பவர்களையோ வழியிலேயே தடுக்க பொலிஸ் நீதிவானுக்கு (Police Magistrate) அதிகாரம் உண்டு. அவர்கள் உத்தரவுக்குக் கீழ்ப்படிவதை உறுதி செய்ய பிணை (Security) கோரலாம். பிணை வழங்கத் தவறினால் அவர்களை 3 நாட்கள் வரை காவலில் வைக்கலாம்.

விதி 3 (முழுமையான தடை): இலங்கையிலோ அல்லது தென்னிந்தியாவிலோ கொலரா அல்லது இதர கொடிய தொற்று நோய் பரவினால், ஆளுநர் அந்த ஆண்டுக்கான கதிர்காம யாத்திரையை முற்றாகத் தடை செய்யலாம்.

விதி 4 (திருவிழாவை ரத்து செய்தல்): திருவிழா நடக்கும் போது கதிர்காமத்தில் தொற்றுநோய் பரவினால், அதிகாரிகள் திருவிழா முடிவுக்கு வந்ததாக அறிவித்து, யாத்திரிகர்களை உடனடியாக ஊருக்குத் திரும்புமாறு கட்டளையிடலாம்.

விதி 5 (அதிகாரிகளின் சிறப்பு அதிகாரங்கள்): நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு மேல் வரும் அதிகாரங்கள் உண்டு:

- குளிப்பதற்கும், குடிநீருக்கும், மலம் கழிப்பதற்கும் தனித்தனி இடங்களை ஒதுக்குதல்.
- ஒவ்வொரு வகுப்பு யாத்திரிகர்களும் தங்குவதற்கான இடங்களை நிர்ணயித்தல்.
- யாத்திரைக் குழுக்களுக்கான பாதைகளைத் தீர்மானித்தல்.
- யாத்திரிகர்களுக்கு வழங்கப்படும் உணவுகளை ஒழுங்குபடுத்துதல்.
- நோயுற்ற யாத்திரிகர்களுக்குத் தனி தங்குமிடம் அமைத்து, மற்றவர்கள் தொடர்புகொள்வதைத் தடுத்தல்.

விதி 6: பொலிஸ் தலைமை அதிகாரி யாத்திரிகர்களை முக்கிய குழுவோடு இணைந்து பயணிக்குமாறு கட்டாயப்படுத்தலாம். மறுப்பவர்கள் குற்றவாளிகள்.

விதி 7 முதல் 12 வரை (சுகாதாரக் குற்றங்கள்): பாதையிலிருந்து 100 யார்டு சுற்றளவுக்குள் கண்ட இடங்களில் மலம் கழிப்பது, அதை மண்ணால் மூடி மறைக்கத் தவறுவது குற்றமாகும். மருத்துவ அதிகாரியால் தகுதியற்றது என அறிவிக்கப்படும் உணவுகளைப் பொலிஸார் பறிமுதல் செய்து அழிக்கலாம். ஆற்று நீரின் மேற்பகுதியில் குளிப்பதோ அல்லது ஆற்றில் இறங்குவதோ குற்றமாகும்.

விதி 13 முதல் 15 வரை: முகாமில் அல்லது காட்டில் சூதாடுவது, மது அருந்திவிட்டு ரகளை செய்வது குற்றமாகும். தொற்றுநோய் உள்ளவர்கள் அதை மறைக்கக் கூடாது. பொலிஸார் ஒதுக்கும் தங்குமிடங்களிலேயே யாத்திரிகர்கள் தங்க வேண்டும்.

பிரித்தானிய தேசாதிபதிகளின் அறிக்கைகளில் கதிர்காம ஆலயம்

1. ஆளுநர் ரோபேர்ட் பிரவுன்றிக் அறிக்கையானது 1818ஆம் ஆண்டு வெடித்த ஊவா - வெல்லஸ்ஸ விடுதலைப் போராட்டத்தின் போது எழுதப்பட்டது. அவ்வறிக்கையில் பிரித்தானிய ஆட்சியை உலுக்கிய இந்த கிளர்ச்சியின் போது, கதிர்காமம் கோயிலின் பொறுப்பாளர்களான கதிர்காம மகா பெத்மேராள (Maha Betmerala of Kataragama) போன்ற சுதேச தலைவர்கள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக செயற்பட்டதை ஆளுநர் பிரவுன்றிக் லண்டனுக்கு எழுதினார். கதிர்காம தெய்வத்தின் பெயரால் மக்கள் அணிதிரள்வதையும், கதிர்காமம் கிளர்ச்சியாளர்களின் ஒரு முக்கிய தளமாக மாறியதையும் இந்த அறிக்கையில் அவர் விவரித்துள்ளார்.
2. ஆளுநர் வில்லியம் கிரெகொரி அறிக்கையில் (1873) கதிர்காமத்தில் பரவிய கொடூரமான கொலரா (Cholera) தொற்று மற்றும் யாத்திரைக்கட்டுப்பாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது. 1870களின் ஆரம்பத்தில் கதிர்காம யாத்திரைக்குச் சென்றவர்களால் இலங்கை முழுவதும் கொலரா நோய் பரவி பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். இதனால் அதிருப்தியடைந்த ஆளுநர் கிரெகொரி, கதிர்காம யாத்திரையை முழுமையாகக் கட்டுப்படுத்தச் சட்டம் கொண்டுவர வேண்டும் என லண்டனுக்கு எழுதினார். இதன் விளைவாகவே 1873ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க கதிர்காம யாத்திரை ஒழுங்குமுறைச் சட்டம் (Ordinance No. 14 of 1873) கொண்டுவரப்பட்டது.
3. ஆளுநர் ஆர்தர் ஹாவ்லொக் அறிக்கையில் (1893) சுகாதாரக் காரணங்களுக்கா கதிர்காம யாத்திரிகர்களின் எண்ணிக்கையை மிகத் தீவிரமாகக் கட்டுப் படுத்தியமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. 1893இல் ஆளுநரின் உத்தரவின் பேரில், கதிர்காமத் திருவிழாவில் பங்கேற்கும் ஒட்டுமொத்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை வெறும் 150 பேராகக் குறைக்கப்பட்டது.
4. ஆளுநர் ஹென்றி மெக்கலம் அறிக்கையில் (1910) கதிர்காமக் கோயிலின் நிருவாகப் பிணக்குகள் மற்றும் சொத்து விவகாரம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கதிர்காமத் தேவாலயத்தின் சொத்துக்கள் மற்றும் அதன் பூசாரிகளுக்கு (Kapuralas) இடையிலான நிருவாக மோதல்கள் பிரித்தானிய அரசாங்க அதிபரால் (Government Agent) விசாரிக்கப்பட்டு, ஆளுநருக்கு அனுப்பப்பட்டது. பாரம்பரிய பௌத்த மற்றும் இந்து மத வழிபாட்டுத் தலங்களின் சொத்து விவகாரங்களில் காலனித்துவ அரசு எவ்வாறு நடுநிலையாக தலையிட

வேண்டும் என்பது பற்றிய கொள்கை விளக்கங்கள் இந்த அறிக்கைகளில் உள்ளன. இவை பற்றிய முழுமையான அறிக்கைகள் லண்டனில் உள்ள பிரித்தானிய ஆவணச்சுவடிக் காப்பகங்களில் பாதுகாக்கப் படுகின்றன. (CO 54/69, CO 54/70 ,CO 54/71, CO 54/466 , CO 54/621).

தொகுப்புரை

ரோபேர்ட் நொக்சின் குறிப்பிலிருந்து அரசியல் மற்றும் ஆன்மீகப் பாதுகாப்புப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. கதிர்காமத் தெய்வத்தின் மீதான பயம் காரணமாக, போர்த்துகீசிய அல்லது டச்சுப் படைகளால் தெற்கிலிருந்து கண்டி இராச்சியத்தை ஊடுருவ முடியாமல் போனது. ஏனெனில் உள்நாட்டு வீரர்கள் அந்தப் புனிதப் பகுதியில் போரிடப் பயந்தனர். அந்தக் காலத்தில் தென்னகப் பகுதியில் இருந்து உப்புச் சேகரிக்கச் செல்லும் மக்கள், கதிர்காமத் தெய்வத்திற்குப் பாதக் காணிக்கை அல்லது வழிபாடு செய்வதைக் கட்டாய வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

பிரித்தானிய ஆளுநர்களின் அறிக்கைகள் நிருவாகக் கட்டுப்பாடு, உரிமைகள் மாற்றம் என கதிர்காமக் கோயிலை வெறும் ஆன்மீக இடமாகப் பார்க்காமல், "அரசியல் பாதுகாப்பு அச்சுறுத்தல்" மற்றும் "பொது சுகாதாரப் பேரிடர் மையம்" என்ற இரு கோணங்களிலேயே முதன்மையாகப் பார்த்தன என்பதை பிரித்தானியர் காலத்து ஆவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்காக தமிழ்நாட்டிலிருந்து லட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். யாத்திரிகர்கள் மூலம் கொலரா பரவி, இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் இறந்தால் பிரித்தானியரின் பொருளாதார லாபம் பாதிப்படையும் என்ற பயம் அரசாங்கத்திற்கு இருந்தது. எனவே, மக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில், ஒரு மத வழிபாட்டை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. யாத்திரிகர்களின் எண்ணிக்கையை வெறும் 150 பேராகக் குறைத்திருப்பது (ஒவ்வொரு முக்கிய மாவட்டத்திற்கும் தலா 25 பேர் மட்டும்) மிக ஆச்சரியமான ஒரு ஒடுக்கு முறையாகும். மாவட்ட அரசாங்க அதிபரிடம் அனுமதிச் சீட்டு பெற்றவர்கள் மட்டுமே கதிர்காமம் செல்ல முடியும் என்ற விதி, நவீன கால விசாமுறை போன்றதாகும். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட எல்லையற்ற அதிகாரங்கள் (வழியிலேயே மக்களைக் கைது செய்தல், பிணை கோருதல், உணவைப் பறிமுதல் செய்தல்) கதிர்காமப் பயணத்தை ஓர் இராணுவக் கட்டுப் பாட்டுப் பகுதியாக மாற்றியதைக் காட்டுகிறது.

ஆயிரக்கணக்கான வருடங்களாக மக்கள் காடுகளின் வழியே பாதயாத்திரையாக (பாத யாத்திரை) தங்களின் சொந்தக் குழுக்களாகச் சென்ற மரபை இவ்விதிகள் மாற்றின. பொலிஸ் காவலில், அவர்கள் சொல்லும் பாதையில், அவர்கள் சொல்லும் முக்கிய குழுவோடு தான் செல்ல வேண்டும் என்ற விதி, யாத்திரையின் ஆன்மீகத் தன்மையை ஒழித்து, அதை ஒரு அரசாங்கப் போக்குவரத்துப் பவனியாக மாற்றியது. மேலும், தங்கும் காலத்தை வெறும் 4 நாட்களாகக் கட்டுப்படுத்தியதன் மூலம், மக்கள் நீண்ட நாட்கள் அங்கேயே தங்கி தியானிப்பதோ அல்லது வழிபாடுகளில் ஈடுபடுவதோ தடுக்கப்பட்டது. 1815ஆம் ஆண்டின் கண்டி ஒப்பந்தத்தின் 5ஆம் பிரிவின்படி, பௌத்த மற்றும் சுதேச மத வழிபாட்டுத் தலங்களைப் பாதுகாப்பதாக பிரித்தானிய அரசு உறுதியளித்திருந்தது. ஆனால், இந்த 1893 வர்த்தமானி உத்தரவானது, காலனித்துவ அரசு தனது தேவைக்கேற்ப சுதேச மத நடைமுறைகளில் எந்தவொரு எல்லையுமின்றித் தலையிடும் முழு அதிகாரத்தைப் பெற்றிருந்தது என்பதை நிரூபிக்கிறது.

எது எவ்வாறிருந்த போதிலும் ஐரோப்பியர்கள் கதிர்காமத்தை ஒரு தூய இந்து அல்லது பௌத்த தலமாகப் பார்க்காமல், அது வேடர்கள், பௌத்தர்கள், இந்துக்கள் மற்றும் இஸ்லாமியர்கள் (பகிர் பாபா போன்ற துறவிகள்) ஒன்றிணைந்த ஒரு தனித்துவமான பன்முகப் பண்பாட்டுத் தலமாக விளங்கியதை வியப்புடன் பதிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உசாத்துணை

1. Geiger, W. (Trans.). (1912). The Mahavamsa or The Great Chronicle of Ceylon. Oxford University Press. (Chapter XIX.
2. Wirz, P. (1954). Kataragama: The Holiest Place in Ceylon. Lake House Investments.
3. Knox, R. (1681). An Historical Relation of the Island Ceylon in the East-Indies. Richard Chiswell.
4. Leonard Wollf. (1963). Diaries in Ceylon (1908-1911). The Hogarth Press
5. Leonard Wollf (1961).Growing: An Autobiography of the Years 1904 to 1911, New York, Harcourt, Brace & World.
6. D'Oyly John. (1929). A Sketch of the Constitution of the Kandyan Kingdom. Colombo. Government Printer.
7. The Hindu Organ - Vol. XLVII No. 11, May 20, 1935.

கதிர்காமத் திருத்தலம் அன்றும் இன்றும்